# திசை

## மாணவரின் தோழன்

கல்வி,கலை,அறிவியல்,தொழில்நுட்பச் சஞ்சிகை

2010 ஏப்ரல்,மாரச்

உள்ளே.......



கட்டுரைகள் கல்வி,அறிவியல் சார்ந்தவை



கவிதைகள்

சிறுகதை சிறுவர்க்கானது



சித்திரக்கதை "ஈடிஸ்" இன் சவால்

மாணவரது ஆக்கம்

சிரிப்போம் சிந்திப்போம்

வெளியீடு:-"திசை"வெளியீட்டுக்குழு, மார்ச்-15, 2010 விலை:20.00

## திசை,முதலாவது இதழ்

சஞ்சிகையின் பெயர்:- திசை
ஆசிரியர்:- சி.சத்தியபாமா
ஓவியங்களை,சஞ்சிகையை
கணினியில் வடிவமைத்தவர்:- சக்தி
வெளியீடு:- "திசை" வெளியீட்டுக்குழு

மாணவர்களே!

அன்பான வாசகர்களே!

"திசை" பற்றிய உங்கள்
ஆக்கபூர்வமான விமர்சனங்களை,
உங்கள் புதிய ஆக்கங்களைத் தவறாது
"திசை"க்குத்தர
முயற்சிப்பீர்களா..!

முகவரி:-

"திசை"
ஆசிரியர்,
சி.சத்தியபாமா,
கருணாநிதி ச.ச. நிலையம்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

# உயிருக்கு விலையுமுள்ளதோ!

உலகைக் கைகளிலேந்துவோம்-மனிதர்
உள்ளத்தை வானுக்குயர்த்துவோம்
பள்ளத்தில் நீரைப்பாச்சுவோம்
பயிருக்கு நன்றாய் ஊற்றுவோம்

உயிருக்கு விலையுமுள்ளதோ....!
ஊற்றிடும் குருதியும் உனதோ...!
வேரின்றி மரமோ----!
தாயின்றி மகவோ----!
மண்ணின் மடியின்றி---,
மாந்தருயிர்த்தாரோ---!
இறுமாந்தென்னபயன்---,
இகழுடை, புகழுடை,
எல்லா மக்களும்,
இப்புவியீன்ற மகரென்று காண்.

ஆக்கம்:-பாமா

# மாணவர் சமுதாயத்தைச் சீர்மியம் மிக்கதாக்கும் பணி எல்லோருக்கும் உரியது

மனிதன் வாழும் உலகமானது இன்று சிக்கல் நிறைந்ததாக மாறிச்செல்வதனைக் காணமுடிகிறது. இதனால் மனிதத்தை மிளிர்விக்கும், மனித உணர்வுகளும் அல்லற்பட்டு அவலப்பட்டு மதிப்பிழந்து மரணித்துக் கொண்டே செல்வதை எமால் உணரவும் முடிகிறது.எனினும் நின்று நிதானித்து, சிந்திக்க எமக்கு நேரம் கிடைப்பதில்லை. அன்பு, இரக்கம், பொறுமை, விட்டுக்கொடுத்தல், சகோதரத்துவம் போன்ற விழுமியப் பண்புகள் அழிந்தொழிந்தும் செல்கின்றன. எனவே நாம் இப்பண்புகளை வளர்ப்பதில் அக்கறை செலுத்த வேண்டிய கடப்பாட்டிற்கு ஆளாகின்றோம். அதற்கான செயற்பாட்டினை எங்கே ஆரம்பிப்பது அதற்குப் பொருத்தமானவர்கள் யாவர்? எனும் வினா இந்நிலையில் எம்மிடம் எழுவது இயல்பு. அப்போதுதான் எமது பார்வை மாணவர்பால் செல்கின்றது.

அவர்கள் மூலமே சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்கு நல்லொழுக்கத்துடன் கூடிய நல்ல வலுமிக்க மனவுறுதியை அவர்களிடம் உருவாக்க வேண்டும். அதற்கான முதற்படிநிலை அவர்களது நடத்தைக் கோலங்களை நுணுக்கமாக அவதானிப்பதே. இவ்வாறு அவதானித்ததன் மூலம் கிடைத்த தரவுகளில் ஒன்று அவர்களில் பெரும்பாலானோர் நெறிபிறழ்வுக்கு உட்படுவதாகும். இதற்கான காரணங்களை ஆராய்ந்தால் அவற்றில் முக்கியமான காரணங்களில் ஒன்று குடும்பம்.

இன்று குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பு, பரிவுகாட்டுதல் இல்லாதநிலை, ஒற்றுமைச்சிதைவு, தவறான நடத்தைகள், பெரியவர்களின் பொறுப்பற்ற செயல்கள், குடும்பத்தலைவியரின் சிந்தனையைப் பாதித்

துள்ள "சீரியல்" மாயம் என்கின்ற மையப்புள்ளிகளை நோக்கிய செயன்முறைகளே காணப்படுகின்றன. இவை வளரும் பிள்ளைகளுக்கு யாருக்கும் தெரியாமலே உரமாகத் தூவப்பட்டு விடுகின்றன.

அடுத்து குடும்பத்தைத் தாண்டி ஆராய்ந் தோமானால் அவன்வாழும் சமூகம் அவனைப்பாதிக்கும் பலகாரணிகளைக் கொண்டுள்ளது. அச்சமூகத்தின் பாரம்பரியங்கள், அது கொண்டுள்ள நியதிகள், சமூகத்தில் அவர்களுக்குள்ள பாதுகாப்பின் தன்மை, சமூக எதிர்ப்பு நடத்தை கொண்டவர்களின் தோழமை என்பவை மாண வரிடத்தே தாக்கததை ஏற்படுத்துவதில் முக்கியபங்கை வகிக்கின்றன.

மேலும் நோக்கின், நவீன இலத்திரனியல் தொடர்பு சாதனங்களின் உற்பத்தி, அதன் பாவனைப்பெருக்கம் மனித நடத்தைகளில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மாணவர் சமுதாயத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்ளை ஆராய்வோமானால், இவை மாணவருக்கு மிக நன்மை தரும் விடயங்களாக வெளிப்பட்டாலும், நடைமுறையில் பிரதிகூலங்களையே கொடுத்துள்ளன எனலாம். கையடக்கத் தொலைபேசியில் அவசியமற்ற உரையாடலில் வீண் பொழுது போக்குவது, தரக்குறைவான சினிமாக்களில் மூழ்கி நேரத்தை வீணடிப்பது, மஞ்சட் பத்திரிகைகளை அலசுவது, பாலியல் ரீதியான பிழையான நடத்தைகளைத்தூண்டும் இணையத்தளங்களுக்குள் நுழைவதுபோன்ற செயற்பாடுகள் யாவும் மாணவர்களின் நெறி பிறழ்வுக்கு பிரதான காரணிகளாகின்றன.

ஆகவே மேற்கூறிய யாவற்றையும் கருத்திற் கொள்ளும்பொழுது பெற்றோர்களும் சமூகத்தை வழி நடத்தும் பொறுப்பிலுள்ளவர்களும் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களை நுணுக்கமாக அவதானிக்க வேண்டிய

தேவை இன்று வலுப்பெற்று வருகின்றது.அவ் அவதானிப்புக் களின் அடிப்படையில் பிள்ளைகளைச் சீரான, சிறப்பான பாதைக்குத் திருப்ப வேண்டியது யாவர்க்கும் காலமிட்டிருக்கும் பணியாகும்.


இப்பணியைப் பாடசாலைகள் எப்பொழுதுமே செய்து வருகின்றன. பாடசாலையின் ஒவ்வொரு செயற் பாடுகளும் வாழ்க்கைக்கான அறக்கருத்துக்களையும், வாழ்க்கைக்கான உயர்ந்த குறிக்கோள்களையும் மாண வப் பருவத்திலேயே அவரது உள்ளத்தே அமைத்து அவற்றுக் கேற்ப வாழக்கூடிய பழக்கத்தை வழங்குவதாக அமைகின்றன.

ஒழுக்கப் பண்புகளைக் கலைத் திட்டத்தினூடும், மறைக்கலைத்திட்டத் திட்டதினூடும் கொண்டு செல்கின்றது. மேலும் மாணவரிடத்தே ஒழுக்கப் பண்பை வளர்ப்பதில் பாடசாலைகள் புதியதொரு போக்கி னைக் கையாள்வதனைக் காணலாம்.ஆரம்ப காலங்களில் வகுப்பறையில் மாணவர்கள் சத்தமின்றி அமைதியாக இருக்க வேண்டும் என்பதற்காக வசைபாடல், கட்டாயப்படுத்தல், தண்டனையளித்தல், பிரம்பு கொண்டு நையப்புடைத்தல் எனும் புறக்கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டன.இங்கு ஒழுக்கம் என்பது மாணவர்களைத் தவறு செய்யாமல் தடை செய்வதையே(எதிர்மறைக் கடடுப்பாடு-நெபயவளைந con-trol) நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், தற்காலத்தில் ஒழுக்கம் என்பது நற்பழக்கவழக்கம், நன்மனப் பான்மை போன்றவற்றைப் பெற்று சிறப்பான ஆளுமை வளர்ச்சியைப் பேண உதவுவதாக அமையவேண்டும் எனும் நோக்கில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இதன்படி மாணவர்கள் தாமே விரும்பி பாட விடயங்களை ஏற்கவேண்டும், கற்க வேண்டும் எனும் அடிப்படையில் வகுப்பறைச் செயன்முறைகள் அமைந்து செல்கின்றன. இவ்வாறான ஒழுக்கப் பண்புகளை அடைந்தோர் தம்மைப்

பொறுத்தவரை மட்டுமன்றிச் சமூகத்தைப் பொறுத்த அளவிலும் மக நல்ல பொருத்தப்பாட்டைப் பெற்றவர் களாக வாழ்வர் என்பது கல்வியியலாளர்களின் எதிர்பார்ப்பு.

இவ்வகையில் மாணவர் சமுதாயத்தைச் சீரமைப்படுத்துவதில் பாடசாலை தனது பணியைச் செவ்வனே செய்து வருகின்றது.குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் தொடர்பு சாதனங்களுககும் உரிய பங்கைக் கவனத்திற் கொண்டு பெற்றோர் விழிப்பாக இருக்க வேண்டும். அவ்வாறாயின் குடும்பத்துக்குச் சிறந்த தொரு வாரிசையும் சமூகத்துக்கு நல்லதொரு பிரஜையையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

ஆக்கம்
திருமதி.ம.அசோகலிங்கம்
B.A(HONS), PGDE.



# “ஈடிஸ்”(டெங்கு நுளம்பு)இன் சவால்!

ஆக்கம்-சக்தி




விரட்டிப்பாரு...விரட்டிப்பாரு... தம்பி...விரட்டிப்பாரு...!
நானிருக்கும் இடம்தேடி நீ வந்து அழித்தாலும; மாயமாய் மறைந்து பின; நியமாய்...வந்துன் மேனி துளைப்பேன்!!
ஊரெல்லாம் உள்ள பள்ளங்கள் குழிகள் பற்றைகள் பறுகுகள் தேடி அழித்தாலும் நீங்க வரவீங்களா....! வாங்கடி கண்ணுங்களா... வாங்க......!
black killer...!!! பாயுங்கடி...! பாயுங்கடி...!
பொரிக்கிறாண்டி...!!! செத்தோமடி...!!!
ஆ....!!! ஆ...!!! ஐயோ...!!! செத்தோம.........!

# வாசிப்பை நேசிப்போம்

பாடசாலை விழுதுகள் நாம்
பள்ளிநூலகம் தனை-மிகப்
பயனபடுத்தியே எந்நாளும்
மிளிர்ந்திடுவோம் பாரினிலே

பாசி மூடிய பவளம்போல
பயனற்றிருக்காது கதை,
கவிதை, கட்டுரையென
களிப்புடனே பலவற்றையும்
பாடசாலை நூலகம் தனில்
படித்திடுவோம் பரிவுடனே

மாரித் தவளையின்இயல்பில்
மாணவவர் நாம் வகுப்பினிலே
பொன்னான நேரந்தனில்-வீணே
பகிடி வதைகள் செய்திடாது
ஆயிரமாயிரம் புத்தகம் புரட்டி
மாறிடுவோம் பூரண மனிதர்களாய்.

நன்றி "கலங்கரை"

துளசி அமிர்தலிங்கம்
தரம்-12B கலை

## எதார்த்தங்கள் சாவதென்ன?

ஏன் இந்த அவலம்
தமிழ் மண்ணை எள்ளி
நகையாடுதே உலகம்,

வானம் தரும் மழை போல
வற்றாத ஜீவநதி போல

கரை புரண்டு ஓடுதே
கண்ணீரும்

காற்றாய் அசையுதே
வாழ்க்கை எனும் ஓடம்.

தேற்ற யாரும் இல்லை
தேம்பி அழுகுதே தமிழ் மண்ணும்

அகதிமுகக் கூடாரம்
அங்கே,

ஊனமுற்றுக் கிடக்குதே
உயிரோடு போராடும் உள்ளங்கள்

காலமேகம் மாறுகையில்
கூதிர் அடிக்கும்
குற்றாலமெனக் குளிர் எடுக்கும்
அனாதைப் பள்ளத்தில் வீழ்ந்து
உயிர்கள் துடிக்கும்.


இத்தனைக்கும்,
மண்செய்த பாவமென்ன.
எதார்த்தங்கள் சாவதென்ன ?

ஆக்கம்:- கதிர்

## *மீப்பெரு விண்மீன்*
*(அண்ட அதிசயம்)நன்றி,அறிவுக்களஞ்சியம்*

சூரியனை விடப் பன்மடங்கு குறுக்களவு கொண்டதும், சூரியனைக்காட்டிலும் பத்தாயிரம் முதல் பத்துலட்சம் வரை பொலிவு மிக்கதும், 30,000-3000 பாகை புற வெப்பநிலை உடையதுமான, மிகப்பெரும்பூத விண்மீன்களை மிகப்பூத விண்மீன்கள் அல்லது மீப்பெரு விண்மீன்கள் (super giant star) என்று சுட்டுவோம்.

கனத்த விண்மீனுக்குள் தொடர்ந்து நிகழும் அணுக்கருப்பிளவு வினைகளால் உள்வெப்பம் அதிகரித்து, அந்தவிண்மீன் அந்தப் பொலிவுடன் தோன்றும் போது மிகைப்பூத விண்மீன்கள் உருவாகின்றன. அவை பெரும்பாலும் நீல இராக்கத் தோற்றமுடையவை. அவற்றின் புற வெப்பநிலை 30,000 பாகை இருக்கும். சூரயனைக் காட்டிலும் 20 மடங்கு குறுக்களவு உடையதால் இந்தப்பூத விண்மீன்களிலிருந்து மிகைப்புது விண்மீன் (super nova) வெடிப்புகள் எழும் அதுவே இந்த விண்மீனின் இறப்பும் ஆகும்.




**பரிமாண வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தில் உள்ளகத்தில் இரும்புடன் கூடிய கனத்த செம்பூத விண்மீன்**

சிலபெரும்பூத விண்மீன்களில் நிலையீர்ப்பு விசை குறைவாக இருப்பின் உள்வெப்பத்தினால் அவை ஊதிப்பெருக்கும் இச்சூழ்நிலையில் அகஅழுத்தம் தளருவதனால் அணுக்கருப் பிளவு வினைகளும் தணிந்து விண்மீன் குளிர்வடையும். அதன் போது புற வெப்பநிலை 3000 பாகை அளவே இருக்கும் நிலையில் சிவப்பு நிறமுடைய செம்பூத விண்மீன் (சநன பயைவெ ளவயச) உருவாகும். ஆயின் மிகைப்பூத விண்மீன் நிலைக்கு விரிவடைந்தால் அதன் உள் அடர்த்தி குறைந்து, நிலையீர்ப்பு விசையும் குன்றிடும். அந்நிலையில் விண்மீனிலிருந்து ஆற்றல் பெருவாரியாக வெளியேறத் தொடங்கும். ஆகவே நியூட்ரினோ போன்ற அணுத்துகள்கள் அடங்கிய விண்மீன் காற்றாக அண்ட வெளியில் வீசும். இவ்வாறு மெல்ல வயதாகும் அந்த விண்மீன் பத்து லட்சம் அல்லது ஒரு கோடி ஆண்டுகளில் இறந்து போகும்.

| | |
|---|---|
| பு<br><br>ய<br><br>ல் | *மரங்கள்....<br>வேரோடு......<br>பிடுங்கப்படுகின்றன.........!<br>தூக்கித் தொலைவில்,<br>வீசப்படுகின்றன.<br>அவை....<br>பாலைவனத்தின்,<br>மணல்முகடுகளின்மீது<br>விழுகின்றன.<br>சுடு மணல் மூடுகின்றது,<br>புதைகின்றன.<br>உறக்கம் .....முடக்கம்,<br>முளைக்கவழியில்லை,<br>முடிந்திடவுமில்லை....<br>உயிர்வதை....<br>ஆயுள்வரை....!!* |

சக்தி

## பொருத்தமான உணவுமுறையைக் கடைப்பிடிப்பதனூடாக நோய்கள் எம்மை அணுகாது பாதுகாப்போம்

எம்மை நோய்கள் பீடித்துக் கொள்வதற்கு பலகாரணங்கள் உள்ளன.

*1.நாம்எமது பெற்றோரிடமிருந்து பிறப்புரிமை வழியாக(ஜீன்) சில நோய்களைப் பெற்றுக்கொள்கிறோம்.*

*2. நாம் சுவாசிக்கும் காற்று, குடிக்கும்நீர் என்பவை மாசடைந்திருத்தல், சுற்றுச்சூழல் அணுக்கதிர் வீச்சினால் மாசுறல; போன்றவற்றால் நோய் வாய்ப்படுகின்றோம்.*

*3.ஒரு நோயாளியிடமிருந்து நேரடியாகவோ அல்லது நோய் காவிகளினூடகவோ எமக்கு நோய்த்தொற்று ஏற்படலாம்.*

*4.விபத்துக்கள் மூலமும் நாம் நோய்க்குட்படுகின்றோம்.*

*5.முக்கியமாக எமது உணவுப்பழக்கத்திலுள்ள குறைபாடு காரணமாகபல நோய்களைச் சம்பாதித்துக்கொள்கிறோம்.*

மேற்கூறப்பட்ட காரணங்களில் இறுதியாகக் கூறப்பட்டுள்ள தவறை நாம் முடிந்தளவு நிவர்த்திக்கலாம். எமது உணவுப்பழக்கத்தில் உள்ள குறைபாடுகளினால் நாம் எமது நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கிறோம்.இதனால் நோய்க்கிருமிகள் எம்மை இலகுவில் தாக்குகின்றன.

இயற்கையாகக் கிடைக்கும் உணவுவகைகள் எம்மில் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கின்றன. அவற்றையும் அதிக நாட்கள் குளிருட்டியில் வைப்பதாலோ அல்லது சமைக்கும்போது அதிக வெப்பமேற்றுவதாலோ அவை அத்தன்மையை இழந்து விடுகின்றன.

மேலும் பொதி செய்யப்பட்ட உணவுகளுக்கு, நிறமூட்டுவதற்கோ சுவையூட்டுவதற்கோ வெவ்வேறு வகையான இரசாயனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இயற்கை யாகக் கிடைக்கும் பழவகைகளுக்குக்கூட கனிய வைப்பதற்காக இரசாயனக்கூறுகள் சேர்க்கப்படுகின்றன. இவ்விர சாயனங்கள் உடலுக்குக் கெடுதியை விளைவிக்கின்றன. பல விதமான நோய்களை உண்டாக்குவதற்கும் ஏதுவாகின்றன. ஆகவே, எமது எணவுப்பழக்கத்தில் விழிப்போடிருப்போம்.


## அப்பாடா..என் கண்கள் தப்பின!

ஒரு கிராமத்தில் பணக்காரக்கிழவி ஒருத்தியும் வசித்து வந்தாள். அவளின் பிள்ளைகள் வெளியூரில் வாழ்ந்து வந்ததால்,அவள் உதவியற்றவளாகக் காணப்பட்டாள். அவளின் வீட்டில் உணவுக்களஞ்சிய அறைக்குள் எலிகளின் தொல்லைகள் மிகவும் அதகமாகியிருந்தன.தானிய மூடைகளைச்சேதமாக்கின. பலகாரப்பெட்டிகளுக்குள் குதித்து விளையாடின. அவள் சேமித்து வைத்திருந்தவை எல்லாம் அழிந்துபோவதை அவளால் தடுக்க முடியவில்லை. எலிகள் வீட்டுக்கூரையின் உட்பக்கமாகத்"தாம்..தீம்..'என்று குதித்துக்கும்மாளமிடுவதும், அவளில்லாத வேளைகளிலில் தானிய மூடைகளைக் காலி செய்வதுமாக இருந்தன.



இதனால் வருத்தமடைந்த கிழவி கடை கடை யாக ஏறி இறங்கி, வித விதமான எலிப்பொறிகளை வாங்கிவவந்தாள். களஞ்சியவறையினுள் எலிகள் அகப்படக்கூடிய வகையில் ஆயத்தப்படுத்தி வைத்துவிட்டு அவள் உறங்கிவிட்டாள். காலையில் ஆவலோடு போய் எலிப்பொறிகளை நோக்கினாள். ஏமாற்றமடைந்தாள். ஒரு பொறியிற்கூட ஒரு எலிகூட மாட்டவில்லை .இப்போது கிழவி முன்பிலும் மிகவும் வருத்தமடைந்தாள். எலித்தொல்லையை ஒழிக்க ஒரு பூனைக்குட்டியை வாங்கி வளர்ப்பது எனத் தீர்மானித்தாள். அயலூருக்குச் சென்று ஒரு பூனைக்குட்டி

யையும் வாங்கிவந்தாள். அதற்கு மாமிச உணவை ஊட்டி ஆர்வத்துடன் வளர்த்தாள். சிலமாதங்கள் சென்றதும் அது நன்கு வளர்ந்துவிட்டது. பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதற்காக உயரத்துள்ளிக்குதித்தது. கால்களில் அகப்பட்ட பொருட்களை தட்டி ஓடித்தாவித்திரிந்தது.மரங்களின் மீது விர் விர் என்று ஏறியது. மூதாட்டி அதற்கு உணவு கொடுக்கத் தாமதமானால் அவளின் கால்களின் மீது பாய்ந்து கடித்து விடுவதுபோல் பாசாங்கு செய்தது. மூதாட்டியோ தனது கால்களைப்பிடிக்கும் பூனை எப்பொழுது எலியைப்பிடிக்கப் போகிறதோ எனக்காத்திருந்தாள்.



நாட்கள் சில கழிந்தன. கிழவி எதிர்பார்த்தது போல் பூனையும் எலி வேட்டையைத் தொடங்கியது. சில வேளைகளில் ஒரு நாளைக்கு இரு எலிகளைக்கூட கொன்று தனது உணவாக்கியது. களஞ்சிய அறையிலும் எலிகளின் நடமாட்டம் குறையத்தொடங்கியது. கிழவி மிக்க மகிழ்ச்சி


அடைந்தாள். பூனையை அன்பாகத் தடவிவிட்டாள்.ஆசை யோடுஅதனைத் தன்மடிமீது உட்காரவைத்தாள். பூனைக்கு மிகவும் கொண்டாட்டம்.அவள் உறங்கும் மெத்தையில் அதுவும் உறங்கியது. அந்த

மூதாட்டி வளர்க்கும் இரு நாய்களையும்விட தான் அதிக உரிமைகள் அனுபவிப்பதை அது உணர்ந்தது. இதனால் பணக்காரக்கிழவியின் மாளிகை போன்ற அந்த வீட்டிற்குத்தானே இராச குமாரன் என நினைந்து இறுமாப்படைந்தது. பூனையின் எலி வேட்டை தொடர்ந்ததால் கொல்லப்பட்டவை போக எஞ்சிய எலிகள் "தப்பினோம் பிழைத்தோம்" என்று ஓட்டம் பிடித்து, எங்கோ தொலைந்து விட்டன. இதனால் பூனை இராசா அணில் வேட்டையைத் தொடங்க எண்ணினார்.

பூனை கிழவியின் தோட்டப்பக்கம் உள்ள பழமரங்களை அவதானிக்கத்தொடங்கியது. அணில்கள் சுதந்திரமாகத் தாவிக்குதித்துக் கூடியிருந்து உண்டு மகிழ்வதைப்பார்க்க பூனைக்குப் பொறாமை பொங்கி வழிந்தது. மாமரத்தை நோக்கி மறைவாக நகர்ந்தது.மறைவில் இருந்து, மரத்தின் அடியில் பழம்கொறித்துக் கொண்டிருந்த, அணிலொன்றைக் குறிவைத்தது.அணில் மீது பூனை பாய எத்தனித்த பொழுது, அம்மரத்திலிருந்த பறவைக்கூட்டமொன்று கூச்சலிட்டு ஆர்ப் பரித்தது.அணில்கள் பூனையைக்கண்டன. பதிலுக்கு அவையும் கூச்சலிட்டுக்கொண்டு தாவிஓடி விட்டன. இப்போது பூனை அந்தப்பறவைகளை உற்று நோக்கியது. அவை பழங்களை உண்ணவில்லை. பழமரங்களின் இலைகளைப் பற்றியுள்ள புழுக்களை ஒரே கொத்தில் 'லபக்' என்று தூக்கி விடுகின்றன. பூனைக்கு வியப்பாக இருந்தது.


மறு நாளும் பூனை அணிலைப்பிடிக்க முயன்றது. புழுவுண்ணிப்பறவைகளைப் பொருட்படுத்த வில்லை. மரத்தில்ஏறியது.அணிலைக் குறிவைத்து நகர முற் பட்டது. ஆனால் புழுவுண்ணிப்பறவைகள் பூனையை நகர விடவில்லை. பூனையைச்சூழ்ந்து கூச்சலிட்டன. பூனையை

மறித்துநின்று இறக்கைகளை விரித்தன.பூனையின் கண்ணை நோக்கிப் பாயப்போவது போல் இறக்கைகளைச் சிலிர்த்தன. பூனை அதிர்ந்தது. திகைப்பு மேலிடப் பதுங்கிக் கொண்டது. புழுவுண்ணிகள் புழுக்களைக்குறிவைப்பது போல் தன் கண்களைக் குறிவைத்திருப்பதைப் பார்த்து பூனைக்கு உள்ளுக்குள் உதறலெடுத்தது. பதுங்கிப்பதுங்கிப் பின்வாங்கியது. விர் விர் என்று மரத்திலிருந்து இறங்கி அறைக்குள் ஓடி ஒழிந்து கொண்டது. நடுக்கமும் திகைப்பும் இன்னும் மாறவில்லை. "அப்பாடா என் கண்கள் தப்பின" என எண்ணிக்கொண்டுமூச்சு வாங்கியது. தன் இயலாமையை எண்ணியபோது பூனையின் இறுமாப்பும் அடங்கியது.



ஆக்கம்:-பாமா.

# சுயசரிதை



எனது பெயர் வண்ணன். எனது தாயார் பெயர் கறுப்பி. அவள் என்மீது மிகவம் பாசம் கொண்டவள். எனக்கு ஒரு சகோதரியும் இருக்கிறாள். அவள்பெயர் வள்ளி. நாங்கள் ஒரு வீட்டின் தாழ்வாரத்தின் கீழ் வசிக்கிறோம். அந்த விட்டின் எசமானி மிகவும் கோபக்காரி. பலதடவைகள் என தாயை அடித்து விட்டாள். அப்பொழுது நாம் எங்காவது ஓடி ஒழித்துக் கொள்வோம். எனது சகோதரி என்னைவிட தைரியசாலி, என்னைவிட திடகாத்திரமாகவும், சுறு சுறுப்பாகவும் இருந்தாள். நாம் வசிக்கும் இல்லத்துக்கு அருகில் ஒருமைதானம் உள்ளது. அங்குவிளையாட வரும் சிறுவர்கள் எம்மீது மிகவும் அன்பு காட்டினார்கள். தாம் உண்ணும் சிற்றுண்டிகளில் ஒரு பகுதியை எமக்கும் தந்தார்கள். எம்முடன் விளையாடினார்கள். அவர்கள் தான் எமக்குப் பெயரும் சூட்டினார்கள். என்சகோதரி எப்பொழு தும் என்கூடவே இருப்பாள்.ஒருநாள் மைதானத்துக்கு விளையாட வந்த சிறுவன்ஒருவன் அவளை அழைத்துச் சென்றுவிட்டான். என்சகோதரியைப் பிரிந்திருப்பது எனக்கு மிகவும் கவலையாகவுள்ளது. இருப்பினும் எனது தாயாரைப் பிரிய மனமின்றி அவளுடன் வாழ்ந்து வருகிறேன்.

*ஆக்கம்:- சக்தி*

உலகைக் கைகளிலேந்துவோம்-மனிதர்
உளத்தை வானுக்குயர்த்துவோம்!